| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| திரு.M.A.ஹபீபுர் ரஹ்மான்., | திரு / திருமதி. |
| நகர்மன்ற தலைவர், | நகர்மன்ற உறுப்பினர் |
| கடையநல்லூர் நகர்மன்றம், | வார்டு எண். |
| கடையநல்லூர். | கடையநல்லூர் நகர்மன்றம். |

அன்புடையீர்,

கடையநல்லூர் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 10.30 மணியளவில் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். மேற்படி கூட்டப் பொருள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் மேற்படி கூட்டத்திற்கு தவறாது வருகை தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்,
கடையநல்லூர் நகர்மன்றம்.

**கடையநல்லூர் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம்– 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் நகர்மன்ற தலைவர் அவர்களால் நடத்தப்பட்டவுள்ள கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

**தலைமை: திரு.M.A.ஹபீபுர் ரஹ்மான் அவர்கள்.**

**பொருள் எண்.1**

கடையநல்லூர் நகராட்சி – நமக்கு நாமே திட்டம் 2021–22 ன் கீழ் வார்டு எண்.23 கல்லகநாடியம்மன் கோவில் தெற்கு குறுக்குத் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணியினை ரூ.1,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.648 நாள் 21.12.2021.ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்: 27519/2021/P2 நாள்: 08.03.2022ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 25.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. M.மாடசாமி, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.08% குறைவு | ரூ.1000/–செல்லாண் எண். 141/001/2/21–22/0012560 நாள். 25.03.2022 ன் படி செலுத்தியுள்ளார். |
| திருமதி. M.மகேஸ்வரி, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.04% அதிகம் | ரூ.1000/– AXIS Bank KDNR D.D.No.001827 நாள். 25.03.2022 ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.08%** சதவீதம் குறைவாகவும் கொடுத்துள்ள திரு. M.மாடசாமி, ஒப்பந்தக்காரரது ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. ஒப்பந்தக்காரர் திரு. M.மாடசாமி, என்பவரது குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பணியை விரைந்து முடித்திடும் பொருட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்திரவு வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4755/2021/இ1)**

**தீர்மானம் எண்:–18**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னைஅவர்களின் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற அறிவுரைகளுக்கிணங்கவும் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட அறிவுரைகளுக்கிணங்கவும் **அம்ருட் 2.O 2022–2023 திட்டத்தின் கீழ்** இந்நகராட்சிப்பகுதியில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள திட்டபிரேரணை சமர்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்டையில் இந்நகராட்சிப்பகுதியில் கீழ்காணும் விபரப்படி உள்ள குடிநீர் மேம்பாட்டு பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 850.00 லட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதியும் நிதி ஒதுக்கீடு செய்து தரக்கோரும் கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து நகருக்கு வரும் 4800 மீட்டர் பழைய 450mm Rcc பிரதான நீரேற்று குழாயினை (PumpingMain) புதிய 450mm DI குழாயாக மாற்றும் பணி. | ரூ.460.00/– |

| | | |
|---|---|---|
| 2 | கடையநல்லூர் நகராட்சி குடிநீர் விநியோக 6624 எண்ணம் வீட்டு இணைப்புகள் (**Water Supply Hsc Internal Pluming**) வழங்கும் பணி . | ரூ.390.00/– |
| **மொத்தம்** | | ரூ.850.00/– |

<u>அலுவலக குறிப்பு–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசுத்திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி 20.04.2022 அன்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.905/2022/இ1)**

**தீர்மானம் எண்:–19**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னைஅவர்களின் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற அறிவுரைகளுக்கிணங்கவும் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட அறிவுரைகளுக்கிணங்கவும் **அம்ருட் 2.O 2022–2023 திட்டத்தின் கீழ்** இந்நகராட்சிப்பகுதியில் உள்ள நீர்நிலைகளில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டடுள்ளது. அதனடிப்டையில் இந்நகராட்சிப்பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உகந்த கீழ்காணும் ஊரணியினை புனரமைப்பு செய்து மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 60.00 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதியும் நிதி ஒதுக்கீடு செய்து தரக்கோரும் கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | அட்டக்குளம் ஊரணியை புனரமைப்பு செய்து மேம்படுத்துதல் பணி. | ரூ.60.00/– |

<u>அலுவலக குறிப்பு–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசுத்திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி 20.04.2022 அன்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 905/2022/இ1)**

**தீர்மானம் எண்:–20**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

சென்னை தேசிய சுகாதார இயக்குநர் மற்றும் நிர்வாக செயலர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1869/NUHM/SHS/ நாள்.13.10.2021ல் **தேசிய நகர்புற சுகாதார குழுமம் (NUHM) 2021–2022ன் கீழ்** இந்நகராட்சிப்பகுதியில் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டுவதற்கு ரூ.75.00/– இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் மேலக்கடையநல்லூர் பகுதியில் கடையநல்லூர் வட்டம் மற்றும் நகரம் வார்டு ஜே பிளாக் 32 (பழைய புல எண். 634ல் மொத்த விஸ்தீரணம் 1.17.50 ஹெக்டேர்ஸ் பரப்பினுள் 0.08.00 ஹெக்டேர்ஸ் நிலத்தில் புதிதாக நகர்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டுவதற்கு துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் தென்காசி அவர்களிடம் நிர்வாக அனுமதி வழங்க வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டதில் தென்காசி துணை இயக்குநர் சுகாதார பணிகள் (பொ)

அவர்களின் நிர்வாக அனுமதி செயல்முறை ஆணை ந.க.எண்.1025/அ5/2012 நாள்.12.04.2022ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்காணும் பணிகளுக்கு உரிய தொழில் நுட்ப அனுமதி வழங்க வேண்டி தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை அவர்களிடம் திட்ட பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசுத்திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி 20.04.2022 அன்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.4789/2021/இ1)**

**தீர்மானம் எண்:–21**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

கடையநல்லூர் நகராட்சி 1முதல்33 வரை உள்ள வார்டுகளில் குடிநீர் பகுதிகளுக்கு குளோரின் கலந்த குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் குளோரின் பிளாண்ட்டுகள் அமைத்து செயல்ப்பட்டு வரப்படுகின்றது. அதனடிப்படையில் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.87/2021/இ1 நாள். 26.02.2022 ன்படி இந்நகராட்சிப் பகுதிகளிலுள்ள 13 எண்ணம் குடிநீர் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் பொருத்தப்பட்டுள்ள குளோரின் பிளாண்டுகள் தலைமை பணியிடம் நீருந்து நிலையத்திலுள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டி ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை ஆண்டு பராமரிப்பு **(Annual maintenance)** பணிகளின் கீழ் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டுவரப்பட்டது. இந்நிலையில் மேற்காணும் பணிக்கான பராமரிப்பு காலம் 02/2022 ம் தேதியுடன் முடிவுற்றுள்ளது. ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டும் இந்நகராட்சிப் பகுதியிலுள்ள 13 எண்ணம் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மற்றும் தலைமை பணியிடம் நீருந்து நிலையத்திலுள்ள தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள் ஆகியவற்றில் பெருத்தப்பட்டுள்ள குளோரின் பிளாண்டுகளை மீண்டும் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.4,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.754/2022/இ1)**

**தீர்மானம் எண்:–22**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

இந்நகராட்சியின் கீழ்க்கண்ட குத்தகை இனங்கள் குத்தகை காலம் முடிவடைந்து 30 வருடங்களுக்கு மேலாகிறது. மேலும் இக்குத்தகை இனங்களுக்குரிய கீழ்க்கண்ட நிலுவையிலுள்ள வாடகைத்தொகையினை வசூல் செய்ய ஏதுவாக சம்மந்தப்பட்ட குத்தகைதாரர்களின் முகவரிக்கு சென்று நேரடியாக விசாரணை செய்யப்பட்டது. மேற்கண்ட விசாரணையில் சம்மந்தப்பட்ட குத்தகைதாரர்கள் குத்தகை காலத்தில் இந்நகராட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களிலுள்ள முகவரியில் அன்னார்கள் வசிக்கவில்லை என்பதாலும் தங்கள் இருப்பிடத்தைவிட்டு காலி செய்து வெளியூர்களுக்கு சென்றுவிட்டதாக அன்னார்களின் அருகில் உள்ள வீட்டில் உள்ளவர்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே நீண்டகாலமாக நிலுவையிலுள்ள குத்தகை தொகையினை வசூல் செய்ய இயலாத நிலை உள்ளது. மேலும் வரிசை எண்.1, 2 மற்றும் 3ல் கண்டுள்ள குத்தகை இனங்கள் தற்போது இந்நகராட்சி குத்தகை இனங்களில் நிரந்தரமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட குத்தகை தொகையினை வசூல் செய்ய இயலாத நிலையில் வரிசை எண்.1 முதல் 5 வரையிலான தொகை ரூ.107379/– (ரூபாய் ஒரு லட்சத்து ஏழாயிரத்து முன்னூற்றி எழுபத்தி ஒன்பது மட்டும்)ஐ நிரந்தரமாக **WRITT OFF** செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | வருடம் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் | குத்தகைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | 141/1986001 | 1986–87 | பன்றி எரு குத்தகை | திரு.எஸ்.பண்டாரம், இந்திரா நகர், மேலக்கடையநல்லூர் | 5025 |
| 2. | 141/1987001 | 1987–88 | பன்றி எரு குத்தகை | திரு.வ.சுப்பையா, ஆர்.எஸ்.கே.பி.ரோடு, புளியங்குடி | 8258 |
| 3. | 141/1989001 | 1989–90 | பன்றி எரு குத்தகை | திரு.மா.கோவிந்தன், த/பெ.மாரியப்பன், இந்திரா நகர், மேலக்கடையநல்லூர் | 9684 |
| 4. | – | 1996–97 | தினசரி சந்தை குத்தகை | திரு.ப.ராமராஜ், 83ஏ, பெரிய தெரு, முத்துக்கிருஷ்ணாபுரம், கடையநல்லூர். | 1702 |
| 5. | – | 1996–97 | வாரச்சந்தை குத்தகை | திரு.ப.ராமராஜ், 83ஏ, பெரிய தெரு, முத்துக்கிருஷ்ணாபுரம், கடையநல்லூர். | 30325 |
| 6. | 141/1990001 | 1999–2000 | சைக்கிள் ஸ்டாண்ட் குத்தகை | திரு.சுந்தரச்சாமி, வடகாசியம்மன் போவில் தெரு, குமந்தாபுரம். | 52385 |
| | | | | **மொத்தம்** | **107379** |

<u>அலுவலக குறிப்பு–</u>

நீண்டகாலமாக வசூல் செய்ய இயலாத நிலையில் மேற்கண்ட தொகையினை **WRITT OFF** செய்யலாம் 2021–22ம் நிதியாண்டு முடிவடையும் நிலையில் உள்ளதால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட தொகை **WRITT OFF** செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண். 4959 / 2022/சி2)**

**தீர்மானம் எண்:–23**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.7

இந்நகர்மன்ற தீர்மானம் எண்.633 நாள்.29.11.2021ன்படி நடைபெற்ற முடிந்த நகர்ப்புற உள்ளாட்சி சாதாரணத் தேர்தல்கள்–2022க்கு உத்தேச செலவுத் தொகை ரூ.40.00 நாற்பது லட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை அலுவலக கடித எண்.8198/AC/2/2021 நாள்.15.02.2022, 17.02.2022ம் தேதிய கடிதங்களில் தெரிவித்துள்ள உத்தரவின்படி இந்நகர்மன்ற தீர்மானம் எண்.669 நாள்.31.12.2021 மற்றும் தீர்மானம் எண்.57 நாள்.25.01.2022ன்படி இந்நகராட்சியில் நடைபெற்று முடிந்த உள்ளாட்சி சாதாரணத் தேர்தல்கள்–2022 தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி கீழ்க்கண்ட செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | மேற்கொள்ளப்பட்ட பணியின் விபரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1. | வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றிய வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான மிகை ஊதியம் | 533650/– |

| | | |
|---|---|---|
| 2. | 19.02.2022 வாக்குப்பதிவின் போது பதட்டமான வாக்குச்சாவடிகளை பார்வையிட மாவட்ட தேர்தல் அலுவலர், தென்காசி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட தேர்தல் நுண்பார்வையாளருக்கான மிகை ஊதியம் | 2000/- |
| 3. | 22.02.2022 அன்று வாக்கு எண்ணிக்கை அலுவலர் (ம) வாக்கு எண்ணிக்கை உதவியாளருக்கான மிகை ஊதியம் | 15650/- |
| 4. | வாக்கு எண்ணிக்கையினை பார்வையிட மாவட்ட தேர்தல் அலுவலர், தென்காசி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட நுண் பார்வையாளருக்கான மிகை ஊதியம் | 1250/- |
| 5. | தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான ஊதியம் | 165000/- |
| 6. | உள்ளாட்சி தேர்தலுக்கான மாவட்ட தேர்தல்அலுவலர் தென்காசி அவர்களில் நியமனம் செய்யப்பட்ட தேர்தல் பறக்கும் படை அலுவலர்களுக்கான (Flying SQuard) மிகை ஊதியம் | 73500/- |
| 7. | மாவட்ட தேர்தல் அலுவலர், தென்காசி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட 7x3=21 மண்டல அலுவலர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான மிகை ஊதியம் | 423500/- |
| 8. | நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் முழுமையக்க தேர்தல் பணியாற்றிய நகராட்சி பணியாளர்களுக்கன ஊதியம் | 344500/- |
| 9. | வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவின் போது கொரோனா தொற்று நோய் பரவலை தடுக்க (Covid-19) நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கான ஊதியம் | 41000/- |
| 10. | மாவட்ட தெர்தல் அலுவலர், தென்காசி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.ந18/5326/2021 நாள்.01.12.2021 மற்றும் நாள்.30.01.2022ன்படி உள்ளாட்சி தேர்தலுக்கு தேவையான உறைகள் மற்றும் அஞ்சல் வாக்குச்சீட்டு உறைகளை சென்னை, அரசு அச்சகம் மற்றும் சேலம் அரசு கிளை அச்சகத்திலிருந்து தனியார் வாகனம் மூலம் எடுத்து வந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்தமைக்கான செலவினம். | 27400/- |
| 11. | உடல் ஊனமுற்றோர்கள் வாக்களிக்க ஏதுவாக Wheel Chair Volunter1's நியமனம் செய்யப்பட்டதற்கான ஊதியம் | 1750/- |
| 12. | வாக்கு எண்ணிக்கை மையத்தில் தேர்தல் பொருட்கள் பெறுவதற்கு நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கான ஊதியம் | 2500/- |
| 13. | உள்ளாட்சி தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்குச்சாவடி பட்டியல்கள் புகைப்பட வாக்காளர் பட்டியல் புகைப்பட வாக்காளர் பட்டியல், புகைப்படமில்லா வரைவாக்காளர் பட்டியல்கள், தேர்தல் தொடர்பான கையேடுகள், படிவங்கள், அடையாள அட்டைகள் மற்றும் போஸ்டர்கள் அச்சடித்து வழங்கியமைக்கு – செலவினம் M/S.ஆல்பா ஆப்சேட், 31/AIS வடக்கு ரத வீதி சங்கரன்கோவில் அச்சகத்திற்கு வழங்கப்பட்டமைக்கு | 448386/- |
| 14. | தேர்தலுக்கு பயன்படுத்தப்படும் ஆரோ கிராஸ் முத்திரை மற்றும் ரப்பர் முத்திரைகள் மற்றும் தேர்தல் தொடர்பான அனைத்து முத்திரைகள் வழங்கியமைக்கு 'சன்ரப்பர் ஸ்டாம்ஸ்' திரு.D.மாரியப்பன் 144/53C– கன்னிமாரயம்மன் கோவில் தெரு, தென்காசி வழங்கிய வகைக்கு | 18620/- |
| 15. | உள்ளாட்சி தேர்தலுக்கு தேவையான Local Procurement ஸ்டேசனரிஸ் சாமான்கள் கடையநல்லூர் நகராட்சிப் பகுதியிலுள்ள இப்ராஹிம் ஏஜென்ஸி 149A, புளியமுக்கு தெரு, கயைடநல்லூர் முகவரியில் இயங்கும் மேற்கண்ட கடையில் வாங்கி பயன்படுத்தியதற்கான செலவினம் | 34362/- |

| | | |
|---|---|---|
| 16. | உள்ளாட்சி தேர்தலுக்கு தேவையான படிவங்கள் ஒளிநகல் எடுத்து மாவட்ட தேர்தல் அலுவலர், தென்காசி அவர்களுக்கு அனுப்பியதற்கு V.முருகேசன், ராஜம் ஜெராக்ஸ், மெயில் பஜார், கடையநல்லூருக்கு வழங்கியதற்கான செலவினம் | 7800/- |
| 17. | உள்ளாட்சி தேர்தலுக்கு தேவையான வாக்குச் சீட்டுகள் (Ballot Paper`s) மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர், தென்காசி அவர்களின் ந.க.எண்.ந8/5326/2021–2 நாள்.08.02.2022 செயல்முறை ஆணையின்படி 'GPR` ஆப்செட் பிரஸ் குலவணிகர்புரம், பாளையங்கோட்டை அச்சகத்திற்கு வழங்கியதற்கான செலவினம் | 47705/- |

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 1585 /2021/அ3)**

**தீர்மானம் எண்:–24**

பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது.

**பொருள் எண்.8**

கடையநல்லூர் நகராட்சி – இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் TN 76 AP 4341 டாடா ஏசிஇ மினி ஆட்டோ வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் காலம் **09.03.2022**ம் தேதியுடன் முடிவடைவதால் அதனை மீண்டும் புதுப்பிக்கும் பொருட்டும், உள்ளாட்சி தேர்தல் **2022** நன்னடத்தை விதி அமுலில் இருப்பதை கருத்திற்கொண்டும் ரூ.**36000/–** உத்தேச மதிப்பீட்டில் பழுதுகளை நீக்கம் செய்ய பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15** ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள **08.02.22**ம் தேதி அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு **08.03.2022** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| **1.** | லிங்கம் ஆட்டோமொபைல்ஸ்,<br>**4/69–6**எ, நான்கு வழிச்சாலை,<br>ரெட்டியார்பட்டி,<br>திருநெல்வேலி – **627007** | ரூ.**42300/–** |
| **2.** | ஸ்ரீ முருகா மோட்டார் ஒர்க்ஸ்,<br>**3/514**, செங்கோட்டை மெயின் ரோடு,<br>கொட்டாகுளம் . | ரூ.**35990/–** |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள வரிசை எண்.**2**ல் கண்ட ஸ்ரீ முருகா மோட்டார் ஒர்க்ஸ், **3/514**, செங்கோட்டை மெயின் ரோடு, கொட்டாகுளம் என்பவரின் விலைப்புள்ளியினை ஒப்புக் கொண்டு வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்யப்பட்டதற்கும் அதற்கான செலவினம் ரூ.**35990/–**(ரூபாய் முப்பத்தி ஐந்தாயிரத்தி தொள்ளாயிரத்தி தொண்ணூறு மட்டும்)க்கும், தகுதிச்சான்று பெறுவதற்குரிய செலவினத் தொகை மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 455/2022/எச்1)**

**தீர்மானம் எண்:–25**

பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது.

**பொருள் எண்.9**

கடையநல்லூர் நகராட்சி – இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் TN 76 AP 4388 டாடா ஏசிஇ மினி ஆட்டோ வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் காலம் **09.03.2022**ம் தேதியுடன் முடிவடைவதால் அதனை மீண்டும் புதுப்பிக்கும் பொருட்டும், உள்ளாட்சி தேர்தல் **2022** நன்னடத்தை விதி அமுலில் இருப்பதை கருத்திற்கொண்டும் ரூ.**30000/–** உத்தேச மதிப்பீட்டில் பழுதுகளை நீக்கம் செய்ய பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15**ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள **08.02.2022**ம் தேதி அனுமதி

வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 08.03.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ முருகா மோட்டார் ஒர்க்ஸ்,<br>3/514, செங்கோட்டை மெயின் ரோடு,<br>கொட்டாகுளம் | ரூ.29990/– |
| 2. | லிங்கம் ஆட்டோமொபைல்ஸ்,<br>4/69–6எ, நான்கு வழிச்சாலை,<br>ரெட்டியார்பட்டி,<br>திருநெல்வேலி – 627007 | ரூ.37300/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள வரிசை எண்.2ல் கண்ட ஸ்ரீ முருகா மோட்டார் ஒர்க்ஸ், 3/514, செங்கோட்டை மெயின் ரோடு, கொட்டாகுளம் என்பவரின் விலைப்புள்ளியினை ஒப்புக் கொண்டு வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்யப்பட்டதற்கும் அதற்கான செலவினம் ரூ.29990/–(ரூபாய் இருபத்தி ஒன்பதாயிரத்தி தொள்ளாயிரத்தி தொண்ணூறு மட்டும்)க்கும், தகுதிச்சான்று பெறுவதற்குரிய செலவினத் தொகை மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 456/2022/எச்1)**

**தீர்மானம் எண்:–26**

பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது.

**பொருள் எண்.10**

கடையநல்லூர் நகராட்சி – இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் TN 76 AP 4394 டாடா ஏசிஇ வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் காலம் 09.03.2022ம் தேதியுடன் முடிவடைவதால் அதனை மீண்டும் புதுப்பிக்கும் பொருட்டும், உள்ளாட்சி தேர்தல் 2022 நன்னடத்தை விதி அமுலில் இருப்பதை கருத்திற்கொண்டும் ரூ.55000/– உத்தேச மதிப்பீட்டில் பழுதுகளை நீக்கம் செய்ய பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள ஆணையாளர் அவர்கள் 07.02.22ம் தேதி முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 28.02.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் 08.03.2022 அன்று வரப்பெற்றன.

| வ. எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ்,<br>புதுகுடியிருப்பு,<br>நாகர்கோவில் – 629001 | ரூ.60450/– |
| 2. | ஸ்ரீ முருகா மோட்டார் ஒர்க்ஸ்,<br>3/514, செங்கோட்டை மெயின் ரோடு,<br>கொட்டாகுளம் | ரூ.54900/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள வரிசை எண்.2ல் கண்ட ஸ்ரீ முருகா மோட்டார் ஒர்க்ஸ், 3/514, செங்கோட்டை மெயின் ரோடு, கொட்டாகுளம் என்பவரின் விலைப்புள்ளியினை ஒப்புக் கொண்டு வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்யப்பட்டதற்கும் அதற்கான செலவினம் ரூ.54900/–(ரூபாய் ஐம்பத்தி நான்காயிரத்தி தொள்ளாயிரம் மட்டும்)க்கும், தகுதிச்சான்று பெறுவதற்குரிய செலவினத் தொகை மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.441/2022/எச்1)**

**தீர்மானம் எண்:–27**

பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது.

**பொருள் எண்.11**

கடையநல்லூர் நகராட்சி – இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் TN 76 AP 4374 டாடா ஏசிஇ வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கும் புதுப்பிக்கும் காலம் 09.03.2022ம் தேதியுடன் முடிவடைவதால் அதனை மீண்டும் புதுப்பிக்கும் பொருட்டும், உள்ளாட்சி தேர்தல் 2022 நன்னடத்தை விதி அமுலில் இருப்பதை கருத்திற்கொண்டும் ரூ.43650/– உத்தேச மதிப்பீட்டில் பழுதுகளை நீக்கம் செய்ய பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள 07.02.22ம் அன்று அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 08.03.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ முருகா மோட்டார் ஒர்க்ஸ்,<br>3/514, செங்கோட்டை மெயின் ரோடு,<br>கொட்டாகுளம் | ரூ.43650/– |
| 2. | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ்,<br>புதுகுடியிருப்பு,<br>நாகர்கோவில் – 629001 | ரூ.46600/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட ஸ்ரீ முருகா மோட்டார் ஒர்க்ஸ், 3/514, செங்கோட்டை மெயின் ரோடு, கொட்டாகுளம் என்பவரின் விலைப்புள்ளியினை ஒப்புக் கொண்டு வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்யப்பட்டதற்கும் அதற்கான செலவினம் ரூ.43650/–(ரூபாய் நாற்பத்தி மூன்றாயிரத்தி அறுநூற்றி ஐம்பது மட்டும்)க்கும், தகுதிச்சான்று பெறுவதற்குரிய செலவினத் தொகை மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 442/2022/எச்1)**

**தீர்மானம் எண்:–28**

பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது.

**பொருள் எண்.12**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.04, இரயில்வே பீடர் ரோடு (புளியம்பட்டி), சர்வே வார்டு சி, பிளாக்.36, நகரளவை எண்.27/2ல் (பழைய புல எண்.1081/2) 0.27.50 ஹெக்டேர் சர்க்கார் புறம்போக்கு ரோடு என நிலவகைப்பாடு செய்யப்பட்டுள்ள பகுதியில் 2.0 சென்ட் நிலம் குறவர் சமுதாய மக்களுக்கான ஆதிதிராவிடர் மயானம் அமைப்பதற்கு நில உரிமை மாற்றம் செய்யும் பொருட்டு இந்நகர்மன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றி அதன் நகலினை அனுப்பிவைக்குமாறு வருவாய் வட்டாட்சியர், கடையநல்லூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ1/3400/2021 நாள்.18.02.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடம் நேராய்வு செய்யப்பட்டதில், ஏற்கனவே கிருஷ்ணாபுரம் குறவர் சமுதாய மக்களால் சாலைபுறம்போக்கு பகுதியில் பயன்படுத்தப்பட்டுவரும் மயானப்பகுதியின் தென்பகுதியிலும் மற்றும் மேற்கண்ட சமுதாய மக்களால் அமைக்கப்பட்டுள்ள அ/மி சின்னத்தம்பி சேர்வாரன் கோவில் எதிர்புறமும் அமைந்துள்ளது. மேற்கண்ட பகுதியில் ரோடு அகலம் உத்தேச மயானத்திற்கு தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பகுதி நீங்கலாக 15.00 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது. மேற்கண்ட இடத்தின் அருகாமையில் குடியிருப்பு வீடும் ஏதும் இல்லாத நிலையிலும், ஏற்கனவே மயானப்பகுதியாக பயன்படுத்தப்பட்டு வரும் பகுதியின் அருகாமையிலும் அமைந்துள்ளது. இந்நிலையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–22ன் கீழ் அரசு ஆணை(நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (NS) துறை நாள்.30.10.2021ன்படி மேலக்கடையநல்லூர் புதிய வார்டு எண்.26ல் அமைந்துள்ள மயானபுறம்போக்கு பகுதியில் (Survey Ward J, பிளாக்.32 நகரளவை எண்.20) ரூ.150 லட்சம் மதிப்பீட்டில் எரிவாயு தகனமேடை அமைக்கும் திட்டம் பயன்பாட்டினையும் மற்றும் நோக்கத்தினையும் கருத்தில் கொண்டும் அப்பகுதியில் கீழ்பகுதியிலுள்ள நிலங்களுக்கு வழியுரிமை பாதிக்காத வகையிலும், வருவாய் வட்டாட்சியர், கடையநல்லூர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ள பகுதியில் புதியதாக

குறவர் சமுதாய மக்களுக்கான ஆதிதிராவிடர் மயானம் அமைப்பதற்கு நில உரிமை மாற்றம் செய்ய இசைவு வழங்குதல் குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண்.529/2022/எப்1)**

**தீர்மானம் எண்:–29**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

கடையநல்லூர் நகராட்சி ஆளுகைக்குட்பட்ட பகுதிக்குள் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வேண்டி பெறப்படும் விண்ணப்பங்களின் மீது கட்டிட விதிகளின்படி பரிசீலனை செய்து 30 நாட்களுக்குள் உரிய உத்திரவு வழங்க வேண்டுமென 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 200 & 201 களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பொதுமக்கள் நலன்கருதி கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வேண்டி பெறப்படும் விண்ணப்பங்களின் மீது நடைமுறையிலுள்ள கட்டிட விதிகளின்படி காலதாமதத்தை தவிர்த்து குறிப்பிட்ட கால அளவிற்குள் அனுமதி வழங்கும் பொருட்டு 1971–ம் வருடத்திய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 91-A(1)ன்கீழ் நகராட்சி ஆணையாளருக்கோ அல்லது நகராட்சி ஆணையாளரையும் ஐந்து அல்லது ஆறு நகர்மன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஒரு சிறு குழுவுக்கோ அதிகாரம் அளித்து ஆணை வழங்கலாம் என தனித்த உள்ளூர் திட்ட குழுமங்களுக்கு அரசு ஆணை(நிலை) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி1) துறை நாள்.17.06.2000ன்படி அறிவுரை ஆணை வழங்கியுள்ளது. மேலும் உள்ளூர் திட்ட குழுமங்களின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து உள்ளாட்சிகளுக்கு திட்ட அனுமதி வழங்க கூடுதல் அதிகாரம் வழங்குதல் தொடர்பாக தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் கீழ் வெளியிடப்பட்ட அரசு ஆணை(நிலை) எண்.154 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ4(3)] துறை நாள்.13.10.2020ன்படி வழங்கப்பட்ட அதிகார பகிர்வுக்கு உட்பட்டு, நகரமைப்பு திட்டப்பணிகள் மற்றும் கட்டிட அனுமதி வழங்கும் பணிகள் வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் நடைபெறும் பொருட்டு கீழ்க்காணும் நகர்மன்ற உறுப்பினர்களை கொண்ட குழுவிற்கு அதிகாரம் பகிர்ந்து அளிக்க உள்ளூர் திட்டக்குழுவின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | நகர்மன்றத் தலைவர் | – | குழுத்தலைவர்<br>தனித்த உள்ளூர் திட்ட குழுமம்<br>கடையநல்லூர் |
| 2) | ஆணையாளர் | – | உறுப்பினர் / செயலர்<br>தனித்த உள்ளூர் திட்ட குழுமம்<br>கடையநல்லூர் |
| 3) | திரு.க.முகையதீன் கனி,<br>11வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | – | உறுப்பினர் |
| 4) | திரு.ச.தங்கராஜ்,<br>32வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | – | உறுப்பினர் |
| 5) | திருமதி.மா.தனலெட்சுமி<br>4வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | – | உறுப்பினர் |
| 6) | திரு.எஸ்.திவான் மைதீன்<br>13வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | – | உறுப்பினர் |

7) திருமதி.ரா.சுபா – உறுப்பினர்
3வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்

<u>அலுவலக குறிப்பு :–</u>

கடையநல்லூர் தனித்த உள்ளூர் திட்ட குழுமப்பகுதிகளில் நகரமைப்பு திட்டப்பணிகள் மற்றும் கட்டிட அனுமதி வழங்கும் பணிகள் வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் நடைபெறும் பொருட்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 91-A(1)ன் கீழ் அதிகாரம் பகிர்வு செய்து மேற்கண்டவாறு குழு அமைத்து செயல்படுவதற்கு உள்ளூர் திட்டக்குழு ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 919/2022/எப்1)

**தீர்மானம் எண்:–30**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.14

கடையநல்லூர் நகராட்சியின் அதிகார வரம்பிற்குட்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் கண்டுள்ள பூங்காக்களை தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் மற்றும் திறந்தவெளிகள் (பாதுகாத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1959 மற்றும் விதிகள் 1964ன்படி அரசிதழில் அறிவிக்கை செய்வதற்கு ஏதுவாக பூங்காக்களின் பட்டியல் மற்றும் முழுமையான அறிக்கையுடன் கருத்துரு அனுப்பிவைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5094/2022/டிபி2 நாள்.19.04.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>கடையநல்லூர் நகராட்சியின் அதிகார வரப்பிற்குட்பட்ட பகுதியில் உள்ள பூங்காக்கள் பட்டியல்</u>

| வ. எண் | பூங்காவின் பெயர் | அமைந்துள்ள இடம், வார்டு, கோட்டம், நகரளவை எண் | பகுதியின் பரப்பளவு ச.அடி | நில உரிமையாளர் | தற்போதைய நிலை | அணுகு பாதை | பொருத்த முடைமை | பேணுகை மற்றும் பராமரிப்பு | அறிவிக்கை செய்யப்பட்ட அரசாணை விபரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கிருஷ்ணாபுரம் நகராட்சி பூங்கா | சர்வே வார்டு D. பிளாக் 14, நகரளவை எண். 07 | 7026.28 | கடையநல்லூர் நகராட்சி | பூங்கா மற்றும் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி | பொது தெருவிலிருந்து எளிதான அணுகு பாதை உள்ளது | ஆம் | கடையநல்லூர் நகராட்சி | அரசாணை (நிலை) எண்.223 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை நாள். 24.11.1998 |
| 2. | கடையநல்லூர் நகராட்சி பூங்கா | சர்வே வார்டு F. பிளாக் 13, நகரளவை எண். 03 | 3712.20 | கடையநல்லூர் நகராட்சி | பூங்கா | பொது ரோடு மற்றும் தெருவிலிருந்து எளிதான அணுகு பாதை உள்ளது | ஆம் | கடையநல்லூர் நகராட்சி | |
| 3. | மேலக் கடையநல்லூர் நகராட்சி பூங்கா | சர்வே வார்டு H. பிளாக் 15, நகரளவை எண். 328 pt | 2152.00 | கடையநல்லூர் நகராட்சி | காலியிடம் | பொது ரோடு மற்றும் தெருவிலிருந்து எளிதான அணுகு பாதை உள்ளது | ஆம் | கடையநல்லூர் நகராட்சி | |
| 4. | குமந்தாபுரம் நகராட்சி பூங்கா | சர்வே வார்டு C. பிளாக் 27, நகரளவை எண். 46 pt | 4312.60 | GVM மந்தை புறம்போக்கு | பூங்கா | பொது தெருவிலிருந்து எளிதான அணுகு பாதை உள்ளது | ஆம் | கடையநல்லூர் நகராட்சி | இல்லை |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5. | கிருஷ்ணாபுரம் மனைப்பிரிவு நகராட்சி பூங்கா | சர்வே வார்டு C. பிளாக் 32, நகரளவை எண்.2/2 pt | 4061.90 | கடையநல்லூர் நகராட்சி | காலியிடம் | பொது தெருவி லிருந்து எளிதான அணுகு பாதை உள்ளது | ஆம் | கடையநல்லூர் நகராட்சி | இல்லை |
| 6. | மாவடிக்கால் நகராட்சி பூங்கா | சர்வே வார்டு F. பிளாக் 23, நகரளவை எண். 3 pt | 3435.66 | GVM மந்தை புறம்போக்கு | பூங்கா | பொது தெருவி லிருந்து எளிதான அணுகு பாதை உள்ளது | ஆம் | கடையநல்லூர் நகராட்சி | இல்லை |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பூங்காக்களை தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் மற்றும் திறந்தவெளிகள் (பாதுகாத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1959 பிரிவுகளின்படி அரசிதழில் அறிவிக்கை செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :–

1. அனுமதிக்கலாம்.
2. பட்டியலில் வரிசை எண்.1 முதல் 3 வரையிலான பூங்காக்கள் தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் மற்றும் திறவிடகள் (பாதுகாத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1959 பிரிவு 4(2)ன் கீழ் அரசாணை (நிலை) எண்.223 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி–V) துறை நாள்.24.11.1998ன்படி ஏற்கனவே உறுதி செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**(ந.க.எண்.2384/1997/எப்1)**

**தீர்மானம் எண்:–31**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் கொரோனா பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகாரணங்கள் ரூ.500000/– உத்தேச மதிப்பீட்டில் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.46/25.01.2022ன்படி அனுமதி பெறப்பட்டு **'DHANSHITH TRADING AGENCIES, TRICHY'** நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்கப்பட்டது அதன்படி

| | | | | |
|---|---|---|---|---|
| Lysol | - | 1000 | - | 200000 |
| Hand sanitizer | - | 100 | - | 50000 |
| Hand wash | - | 20 | - | 3600 |
| Face shield | - | 100 | - | 2100 |
| Rubber Cloves | - | 500 | - | 50000 |
| One time use had cloves | - | 2000 | - | 20000 |
| Surgical Mask 3py | - | 20000 | - | 80000 |
| Synthatic Hand clovers | - | 500 Nos | - | 70000 |
| Face Mask –N 95 | - | 100 No | - | 2200 |
| | | | | **477900** |
| | | GST | - | 65536 |
| | | | | **543436** |

மேற்கண்ட தொகையில் ஏற்கனவே மன்ற அனுமதி வாங்கியது போக எஞ்சிய தொகை ரூ.43436/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.6064/2021/எச்1)**

**தீர்மானம் எண்:—32**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகாரணங்கள் மற்றும் கிருமி நாசினிகள் ரூ.400000/— உத்தேச மதிப்பீட்டில் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.48 நாள்.25.01.2022ன்படி அனுமதி பெற்று பொருட்கள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| Rain coat | - | 100 Nos | - | 90000 |
| Reflector jocket | - | 92 Nos | - | 23000 |
| Gum boot | - | 50 Nos | - | 27500 |
| Toilet Cleaning Acid | - | 50 lr | - | 2500 |
| Sprayer | - | 6 Nos | - | 21000 |
| Cheppals | - | 92 Nos | - | 20700 |
| Coconut Bamboo milar | - | 100 Nos | - | 26000 |
| Large fork with handle | - | 100 Nos | - | 49000 |
| Small fork with handle | - | 100 Nos | - | 30000 |
| Garbage Disposal plates | - | 300 Nos | - | 34500 |
| Shovel Hand Grip | - | 125 No | - | 41875 |
| Safety Nyloncap | - | 50 | - | 5000 |
| | | | | **371075** |
| | | GST | - | 43122 |
| | | | | **414197** |

மேற்கண்ட தொகையில் ஏற்கனவே மன்ற அனுமதி வாங்கிய :ரூ.400000/— போக மீதமுள்ள தொகை ரூ.14197/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டபபடுகிறது.

**(ந.க.எண்.6062/2021/எச்1)**

**தீர்மானம் எண்:—33**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு பொருட்கள் மற்றும் டெங்கு நோய்த்தடுப்பு பணிகளுக்கு தேவைப்படும் கிருமி நாசினிகள் ரூ.600000/— உத்தேச மதிப்பீட்டில் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.47 நாள்.25.01.2022ன்படி அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பேசில்லஸ் துரின்ஜியன்ஸிஸ் | - | 175 kg | - | 183225 |
| பைரித்திரம் | - | 200 1r | - | 220000 |
| டெமிபாஸ் (MosQuito Larvcide) | - | 200 lr | - | 125000 |
| | | | | **528225** |
| | | GST | - | 95080 |
| | | | | **623305** |

மேற்கண்டவாறு பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டது. எஞ்சிய தொகை ரூ.23305/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.6063/2021/எச்1)**

**தீர்மானம் எண்:–34**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

இந்நகராட்சி பெரியாற்றுப்படுகையில் உள்ள Gallery well உள்ள 35.00HP மோட்டாருக்கு Starter புதிதாக மாற்றம் செய்யவும், Sump-ல் உள்ள 40.00 HP Sub மோட்டார் இயக்கக்கூடிய Starter புதிதாக மாற்றம் செய்யவும், 7.5 HP Sub மோட்டார் மற்றும் Starter மற்றும் மோட்டாரினை Genset மூலம் இயக்குவதற்கு 100A Change over மற்றும் Cable புதிதாக அமைக்கும் பணியினை அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி பணியினை மேற்கொள்ள **மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் தகுதி பெற்ற விநியோகஸ்தரர்களிடம் 03.01.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் (ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு. S.ஜேசுராஜ்,<br>ஸ்டார் ரீவைண்டிங் & எலக்ட்ரிகல் ஒர்க்ஸ்,<br>182/1C, ஹனிபா காம்ளக்ஸ், பண்பொழி ரோடு,<br>மேலக்கடையநல்லூர்,<br>கடையநல்லூர். | ரூ. 2,49,994/– |
| 2 | திரு. A. மருதப்பன்,<br>தினேஷ் குமரன் ரீவைண்டிங் ஒர்க்,<br>2/160, மெயின் ரோடு,<br>சேர்ந்தமரம். | ரூ. 2,54,732/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ளத்துள்ள திரு. S.ஜேசுராஜ், ஸ்டார் ரீவைண்டிங் & எலக்ட்ரிகல் ஒர்க்ஸ், 182/1C, ஹனிபா காம்ளக்ஸ், பண்பொழி ரோடு, மேலக்கடையநல்லூர், கடையநல்லூர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு பணிகளை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 6138/2021/இ1)**

**தீர்மானம் எண்:–35**

பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது.

**பொருள் எண்.19**

இந்நகராட்சி கல்லாற்றுப்படுகையில் உள்ள நான்கு திறந்தவெளிக்கிணற்றில் இயங்கும் மோட்டார்கள் 2021ம் ஆண்டு அக்டோபர் வெள்ளப்பெருக்கினால் பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதை பழுதுநீக்கம் செய்து பொருத்தும் பணியினை அவசர அவசியம் மற்றும்

அத்தியாவசியம் கருதி பணியினை மேற்கொள்ள **மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் தகுதி பெற்ற விநியோகஸ்தரார்களிடம் 07.01.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் (ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு. S.ஜேசுராஜ்,<br>ஸ்டார் ரீவைண்டிங் & எலக்ட்ரிகல் ஒர்க்ஸ்,<br>182/1C, ஹனிபா காம்ளக்ஸ், பண்பொழி ரோடு,<br>மேலக்கடையநல்லூர், கடையநல்லூர். | ரூ. 2,63,558/– |
| 2 | திரு. A. மருதப்பன்,<br>தினேஷ் குமரன் ரீவைண்டிங் ஒர்க்,<br>2/160, மெயின் ரோடு,<br>சேர்ந்தமரம். | ரூ. 2,67,344/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ளத்துள்ள திரு. S.ஜேசுராஜ், ஸ்டார் ரீவைண்டிங் & எலக்ட்ரிகல் ஒர்க்ஸ், 182/1C, ஹனிபா காம்ளக்ஸ், பண்பொழி ரோடு, மேலக்கடையநல்லூர், கடையநல்லூர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு பணிகளை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 78/2022/இ1)**

**தீர்மானம் எண்:–36**

பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது.

**பொருள் எண்.20**

**நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் – 2022** – கடையநல்லூர் நகராட்சி நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் பணிகளுக்கு தேவையான கணினி சார்ந்த பிரிண்டர் மற்றும் உபகரணங்கள் விநியோகம் செய்யும் பணியினை தேர்தல் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி பணியினை மேற்கொள்ள **மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் தகுதி பெற்ற விநியோகஸ்தரார்களிடம் 27.01.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் (ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1 | M/s. சென்னை கம்ப்யூட்டர்ஸ்,<br>கம்ப்யூட்டர் சேல்ஸ் & சர்வீஸ்<br>1/9, மேல மாசி வீதி,<br>தென்காசி. | ரூ. 2,60,300/– |
| 2 | திரு. முகம்மது காலித்<br>இன்டெல் கம்ப்யூட்டர்ஸ்,<br>கம்ப்யூட்டர் சேல்ஸ், சர்வீஸ் & ஸ்பேர்ஸ்<br>503, மெயின் ரோடு,<br>கடையநல்லூர். | ரூ. 2,58,375/– |
| 3 | முத்து கம்ப்யூட்டர்ஸ்,<br>கம்ப்யூட்டர் சேல்ஸ் & சர்வீஸ்<br>ஸ்ரீ காவேரி டவர்ஸ்<br>145/4, மேல மாசி வீதி,<br>தென்காசி. | ரூ. 2,61,200/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ளத்துள்ள திரு.முகம்மது காலித் இன்டெல் கம்ப்யூட்டர்ஸ், 503, மெயின் ரோடு, கடையநல்லூர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு பணிகளை மேற்கொள்ளப்பட்டதற்கும்

அதற்கான செலவீனத்தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 360/2022/இ1)**

**தீர்மானம் எண்:–37**

பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது.

பொருள் எண்.21

**நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் – 2022** – கடையநல்லூர் நகராட்சி நடைபெற உள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2022க்கு வாக்குசாவடி மையங்களுக்கு அடிப்படை வசதிகள், தண்ணீர் வசதி, கழிப்பிட வசதி, மின் விளக்கு வசதி, மின்விசிறி வசதிகள் செய்யும் பணியினை தேர்தல் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி பணியினை மேற்கொள்ள **மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் 12.01.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்தக்காரார் பெயர் (ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. K.S. அப்துல் மாலிக்,<br>ஒப்பந்ததாரர்,<br>கடையநல்லூர். | ரூ. 5,58,236/– |
| 2 | திரு. P.சாகுல் கமீது,<br>ஒப்பந்ததாரர்,<br>கடையநல்லூர். | ரூ. 5,75,130/– |
| 3 | திரு.V.முத்தையா<br>ஒப்பந்ததாரர்,<br>கடையநல்லூர். | ரூ. 5,92,490/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. K.S.அப்துல் மாலிக், என்ற ஒப்பந்தக்காரர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு பணிகளை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 1585/2021/இ1)**

**தீர்மானம் எண்:–38**

பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது.

பொருள் எண்.22

**நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் – 2022** – கடையநல்லூர் நகராட்சி நடைபெற உள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2022க்கு பறக்கும் படையினருக்கு (Flying Squad) மற்றும் 7 மண்டல அலுவலர்களுக்கு மற்றும் வாக்குபதிவு எந்திரங்களில் (EVM Machine) ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய மின்னனு பொறியாளருக்கு வாக்குசாவடி மையங்களுக்கு சென்றுவர வாகன ஏற்பாடு செய்யும் பணியினை தேர்தல் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி பணியினை மேற்கொள்ள **மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் 27.01.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்தக்காரார் பெயர் (ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. K.S. அப்துல் மாலிக்,<br>ஒப்பந்ததாரர்,<br>கடையநல்லூர். | ரூ. 4,54,000/– |

| | | |
|---|---|---|
| 2 | திரு. P.சாகுல் கமீது,<br>ஒப்பந்ததாரர்,<br>கடையநல்லூர். | ரூ. 4,62,400/– |
| 3 | திரு.V.முத்தையா<br>ஒப்பந்ததாரர்,<br>கடையநல்லூர். | ரூ. 4,66,800/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. K.S.அப்துல் மாலிக், என்ற ஒப்பந்தக்காரர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு பணிகளை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 1585/2021/இ1)**

**தீர்மானம் எண்:–39**

பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது.

**பொருள் எண்.23**

**நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் – 2022** – கடையநல்லூர் நகராட்சி நடைபெற உள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2022க்கு வாக்கு எண்ணும் மையத்திற்க்கு அடிப்படை வசதிகள், பந்தல் வசதி, தண்ணீர் வசதி, மின்விசிறி வசதி, தற்காலிக UPS வசதி, தற்காலிக இணையதள வசதிகள் மற்றும் பதவியேற்பு விழாவிற்கான அடிப்படை வசதிகள், பந்தல் வசதி, செய்யும் பணியினை தேர்தல் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி பணியிணை மேற்கொள்ள **மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் 10.02.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் (ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. K.S. அப்துல் மாலிக்,<br>ஒப்பந்ததாரர்,<br>கடையநல்லூர். | ரூ. 1,98,500/– |
| 2 | திரு. P.சாகுல் கமீது,<br>ஒப்பந்ததாரர்,<br>கடையநல்லூர். | ரூ. 2,06,425/– |
| 3 | திரு.V.முத்தையா<br>ஒப்பந்ததாரர்,<br>கடையநல்லூர். | ரூ. 2,13,150/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. K.S.அப்துல் மாலிக், என்ற ஒப்பந்தக்காரர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு பணிகளை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 1585/2021/இ1)**

**தீர்மானம் எண்:–40**

பார்வையிட்டு பதிவு செய்யப்படுகிறது.

**பொருள் எண்.24**

தமிழ்நாடு மாநில அரசிதழ் வெளியீடு எண்.194 நாள்.30.03.2022 அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022 மற்றும்

இந்நகர்மன்ற தீர்மானம் எண்.15 நாள்.11.04.2022ன்படி இந்நகராட்சியில் சொத்துவரி மற்றும் காலிமனை வரி பொதுச் சீராய்வு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு சொத்துவரி பொதுச் சீராய்வு தொடர்பான அறிவிக்கையினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி வழியாக **13.04.2022** அன்று தினமணி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விளம்பரத்திற்கான கட்டணத் தொகை ரூ.**26145/–**ஐ Express Publication (Madurai) Private Ltd பெயருக்கு வழங்கவும், மேற்கண்ட பொதுச்சீராய்வு அறிவிக்கையினை **13.04.2022**ம் தேதியன்று Indian Express ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.**184275/–** ஒருலட்சத்து எண்பத்தி நான்காயிரத்து இருநூற்றி எழுபத்தி ஐந்து மட்டும் Express Publication (Madurai) Private Ltd –க்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் சொத்துவரி பொதுச் சீராய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதன் அவசர அவசியம் கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட நாளிதழுக்கு தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அங்ககாரத்திற்காக.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 900 /2022/அ1)**

**தீர்மானம் எண்:–41**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.25**

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்–1, நாள்.01.04.2022 மற்றும் இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.15 நாள்.11.04.2022ன்படி இந்நகராட்சியில் சொத்துவரி பொதுச்சீராய்வு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி சொத்துவரி பொதுச்சீராய்வு தொடர்பான அறிவிக்கையினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி வழியாக 13.04.2022 அன்று மாலை மலர் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது.

மேற்கண்ட விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ.17136/–ஐ மலர் பப்ளிகேசன்ஸ் லிமிடெட், திருநெல்வேலிக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட நாளிதழுக்கு நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

**(ந.க.எண். 900 /2022/அ1)**

**தீர்மானம் எண்:–42**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.26**

கடையநல்லூர் நகராட்சி 2021 –2024ம் அண்டின் ஒப்பந்தப்புள்ளி /ஏல அறிவிப்பு தென்காசி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தென்காசி அவர்கள் வழியாக தினகரன் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதற்கு பட்டியலில் கண்டுள்ளவாறு ரூ.24570/– திருநெல்வேலிக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4959/2020/அ3)**

**தீர்மானம் எண்:–43**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.27

**மாண்புமிகு. நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் 2022–23ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிப்பு எண்.15ல் சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்கள் புதிதாக கட்டுதல் மற்றும் பழுதடைந்த பழைய கழிப்பிடங்களை மேம்படுத்திட அறிவித்துள்ளதற்கிணங்கவும்**, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடித ந.க.எண்.9511/2022/SBM நாள்.19.04.2022 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.1540/2015/ஆ2 நாள்.25.04.2022ல் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சி பகுதி வார்டு எண்.26 பண்பொழி ரோட்டில் அமைந்துள்ள பழுதடைந்த சமுதாய கழிப்பறைக்கு சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ. 10.00 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதியும் நிதி ஒதுக்கீடும் செய்து தரக்கோரும் கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசுத்திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி 25.04.2022 அன்று நகர்மன்றத் தலைவர் அவர்கள் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 826/2022/இ1)**

**தீர்மானம் எண்:–44**

அனுமதிக்கப்பட்டது.

<u>5 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் மற்றும் நியமனக்குழு உறுப்பினர் திரு.M.பாலசுப்பிரமணியன் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.</u>

பொருள் எண்.28

கடையநல்லூர் நகராட்சிக்கு உட்பட்ட (பழைய வார்டு எண்.33) புதிய வார்டு எண்.3 மற்றும் 5 இந்தப் பகுதியில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையும் 900 ரேஷன்கார்டுகள் உள்ளது. எங்கள் வார்டுக்கு உட்பட்ட பகுதி மக்கள் தற்போது சுமார் 2.5 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று மிகுந்த சிரமப்பட்டு பொருட்களை வாங்கி வருகின்றனர் முதியோர் மற்றும் கர்ப்பிணி பெண்கள் சிரமத்தை கருத்தில் கொண்டு தற்போது பழைய வார்டு 5 புதிய வார்டு எண்.8ல் செயல்பட்டு வரும் (கடை எண்.27LA001AN) உள்ள கடையினை மேற்கு மலம்பாட்டை தெருவில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான தற்காலிக ஆரம்ப சுகாதார மையம் நிரந்தர கட்டிடத்தில் அமைய உள்ளதால் தற்காலிக ஆரம்ப சுகாதார மையம் இருந்த இடத்தில் தற்காலிகமாக மக்கள் நலனைகருத்தில் கொண்டு நியாய விலைக்கடை அமைத்துத் தர கொண்டு வரும் தீர்மானம்.

வழிமொழிபவர்.

திருமதி.ரா. சுபா, 3 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.

**தீர்மானம் எண்:–45**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நகர்மன்ற தலைவர்
கடையநல்லூர் நகர்மன்றம்